அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 | விரோதி௵—ஆவணிமீ | 1949௵ ஆகஸ்டு—செப்டம்பர்மீ | இதழ் 5

மலையரையன் பரமசிவனுக்குப் பார்வதியைக் கன்னிகாதானம் செய்துகொடுத்தல்

(கந்த புராணச் சித்திர விளக்கம்—3)

2½

146

பொருளடக்கம்

பக்கம்

1. விருக்ஷம் (திருப்புகழ் மணி) ... 1
2. சிவமாவது எப்போது? (அ. மு. பரமசிவானந்தம்) ... 5
3. பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள் ... 7
(க. சோமசுந்தர செட்டியார்)
4. தெய்வ பக்தியும், மனித வாழ்க்கையும் (ராமன்) ... 10
5. சொற்பெரும் பொருட் கடல் (V. S. வெங்கடராமன்) ... 15
6. அடியார் பெருமை (யானைமலைரோடு N. S. ராமச்சந்திர ஐயர்)... 20
7. ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் (V. S. V. கூனூர்) ... 24
8. ஔவைப் பிராட்டியார் (ஸ்ரீ வத்ஸன்) ... 29

இல்லத்தை தெய்வம் கமழ அலங்கரிக்க சைவ சமயாசாரியர்



நால்வர் படம்

பல வர்ணத்தில் நூதன
முறையில் தயாரிப்பு

பரமன், பார்வதி, கணபதி, முருகன்
நடுவில் தரிசனம் கொடுக்க,
அப்பர், சுந்தரர், சம்பந்தர்,
மாணிக்கவாசகர் அவர்கள்
மனதைக் கவரும் வகையில்
தோன்றுகிறார்கள்

10 × 14 அளவில் ரூ. 1-0-0

எங்கள் மற்றப் படங்கள்: ஸ்ரீ குமர குருபரன் ரூ. 1-4-0
ஸ்ரீ அருணகிரி நாதர் 14 × 20 அளவு பல வர்ணம் ரூ. 1-8-0

யுனைடெட் கன்ஸர்ன்
நஞ்சன்கூடு ஆபீஸ், 54 பந்தர் தெரு, மதராஸ் - 1.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன் றறியேன்பராபரமே"

மலர் 1 } விரோதி வருஷ ஆவணி மீ 1949 ஆகஸ்டு—செப்டம்பர் மீ { இதழ் 5

விருக்ஷம்

(திருப்புகழ் மணி)

கண்பார்த்தது மரம். உணர்ச்சியில் பதிந்தது அறம். அறிவில் நின்றது கடவுள். உலகிற்கு உபதேசம் செய்ய வந்த தக்ஷிணாமூர்த்தி இந்தக் காரணம் கொண்டோ ஆல மரத்தடியில் மலையடியில் இடங்கொண்டார். பூமிக்குள் வித்தே என்று தாயுமானார் ஈசனை அழைத்தார். ஈசன் உறையும் ஓர்வித்து உயிர். ஈசன் உறையும் கணக்கிலா வித்துக்களை ஈன்றதை எங்கும் பார்க்கின்றோம். மாயையில் முருகன் மறைந்து விளையாடுகின்றான்.

"உண்டுடுத்து பூண்டு இங்கு
உலகத்தார் போல் திரியும்
தொண்டர் விளையாட்டே சுகம் காண்பராபரமே"

மாயை எனும் மறைவில் விளையாடுவது பராபரம் என்றறிந்தால் துன்பமெலாம் இன்பமாய் மாறிய அனு

வள மொன்று பரங்கிரி வந்தருள் பெருமானே
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே.

பவத்தை கொண்டாடுகின்றார் போலும். இந்த தத்துவத்தை மரம் எவ்வளவு அழகாய் உபதேசிக்கின்றது.

ஓங்காரம் என்பதுஒரு வஸ்து. ஜீவன்,உயிர்ஒருவித்து முளைத்து எழுந்து வளர்ந்து தழைந்து உதவுவதும் சிவமே. "பூமிக்குள் வித்தே அவ்வித்தின் முளையே" என்றார். வித்தின் முளையல்ல-அது முத்தியின் முளைபோலும். உறம் பிடித்து வளர்ந்து ஸ்திரமான பக்தியில் ஈடுபட்ட அன்பர் போலும் சஞ்சலமின்றியும் வேரூன்றியும் ஈசன்செயலே எல்லாம் எனக்கருதியும் இருந்தபடி இருந்து வளர்ந்து திகழ்வது மரம். அம்மையப்பனும் கடவுளை நினைவூட்டுவதும் மரம், பாதித்திருவுரு பச்சென்று நிற்பார் ஈசன்-அர்த்தநாரி. பச்சென்ற இலைகளால் நிழல் அளிக்கும் அன்னை, மரம் எனும் சிவத்தை அணைத்தே விளங்குகின்றாள். சிவமெனும் தத்துவம், மரமாய் விளங்குகின்றது. மேலே அணைத்து நிற்கும் அன்னை, தானே மகிழ்ந்து பூக்கின்றாள். பூவின்தேன் அமிர்தத்தைப்பழமாக்கிக் கொடுக்கின்றாள். அபேத அன்பு. தவத்தின் மிக்கோராயினும், அவத்தின் அழிந்தபாவியாயினும், மிருகஜாதியாயினும், தேவர்களாயினும் மாறாத அன்பு ஒன்றே. யாவர்க்கும் ஒரேநிழல். ஒரேருசி. மரத்தைப்பார்த்தால் பார்வதி பரமேஸ்வரரைப் பார்த்தாற்போல் அன்றோ. அம்மையப்பர் ஒருவரே 'இருவர் அல்லவர். மரம்வேறு தழைவேறு அல்ல. ப்ரஹ்லாதன் கடவுள் தத்துவத்தை உபதேசிக்குங்கால் அதை மரத்துக்கு ஒப்பிட்டுப் போற்றினான்.

அம்போருகனும் அரனும் அறியார்
எம்போலியர் எண்ணிடி வென்பலவாம்
கொம்போடை பூ கனி காய் எனினும்
வம்போ மர மொன்றெனும் வாசகமே"

வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே
இனியுன்றன்ம லர்ந்தில கும்பதம் அடைவேனோ

திருப்புகழில் சிவதத்துவத்தை உணர்த்திய அருணகிரியார் ''தானேவளர்ந்து தானே தழைந்து சிவமாகி'' என்று பாடினார்.

மரத்தின் உறுப்புகள் வெவ்வேறெனினும் மரம் ஒன்று ஆவதுபோல் பேதம் திகழ்ந்த ப்ரபஞ்சம் எல்லாம் ஒன்றே என்றார் போலும்.

ப்ரபஞ்சமே தலைகீழாக வளர்ந்த ஒரு பெரிய அரச மரமாகவன்றோ அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் உபதேசித்ததும். சிருஷ்டியையும் ஆண்டவனையும், தேவியையும், யோகிகளையும் விடாமல் ஞாபக மூட்டுகின்றது மரம். க்ஷேத்திரங்களிலெல்லாம் ஸ்தலவிருக்ஷமென்று ஒரு விருக்ஷத்தை தெய்வீக மாகக்கருதி பூஜிப்பது யாவரும் அறிந்ததே. மேலும் வள்ளிக்குத்தன் லீலைகளால் உபதேசிக்க முயன்ற முருகன், தான் ஒரு வேங்கைமரமாக நின்றாராம். ஸ்ரீ ராமலிங்கஸ்வாமிகள் வாக்கை யார் மறக்க முடியும்.

''வேங்கை மரமாக நின்றாண்டி''

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர்தருவே''—என்று பாடியுள்ளார். ஸ்காந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் எவ்வித மரமாக முருகன் நின்றார் என்பதை சித்தரிக்கின்றார்.

வள்ளியம்மை திருமணப்படலம்

ஆங்கது காலை தன்னி னடிமுதன் மறைக ளாக
வோங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூலதாகப்
பாங்கமர் கவடு முற்றும் பல்கலை யாகத் தானோர்
வேங்கையி னுருவ மாகிவேற்படை வீரனின்றான்

மேலும் திருச்செந்தூர் ஸ்தலபுராணத்தில் முருகனை பெரிய விருக்ஷமாய் அலங்காரப்படுத்தி யிருக்கின்றார் சுகப்ரும்மம்: அதை நோக்குவாம்.

அருள் பரங்கிரிக்குட் சிறந்த பெருமானே
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெருவேனே.

அத்வைதமாம்—ஏகமாய் நின்ற மரம் ஒன்று. பக்ஷத்வயமாம்-கிருஷ்ணபக்ஷம் சுக்லபக்ஷம். திருமூர்த்திகளும் ஒரு மூர்த்தியாய் விளங்குபவராம். தர்மார்த்த காம மோக்ஷபலனை கொடுப்பதாம். ஐந்துபூதங்களாய்ப்பரிமணத் திருப்பதாம் ஆறுசாஸ்திரமாம் கிளைகள் உள்ளதாம். எழுவகை தோல்களால் மூடப்பட்டது. எண்குண பஞ்சரன் ஆனதால் எட்டுபுஷ்பங்கள் பூப்பதுவாம். ஒன்பது கண் துவாரங்கள் உடையதாம். பத்து திசைகளாய் வியாபிந்து நிற்பதாம். அத்புதமான இந்த முருக விருக்ஷத்தை நமஸ்கரிக்கின்றேன் என்றாராம்-சுகர்.

''ஏகம் ; பக்ஷத்வயம்; சாக்ஷாத் த்ருமூர்த்திஞ்ச சதுஷ்பலம் ; பஞ்சஸ்கந்தம் ; ஷட்சாகம் ; ஸப்தத்வகு பரிபூரிதம் ; அஷ்டபுஷ்பம் ' நவாக்ஷாம்ச தசவ்யாப்தம் மஹாத்புதம் ஏவம் ஆதி மஹாவ்ருக்ஷம் பாலயந்தம் குஹம் பஜே''

கம்பர் பண்பமர்ந்த வாழ்க்கையை மரமாகச் சித்தரிக்கின்றார். ஆண்டவன் ஈன்ற அருள்வித்து, கல்வியெனும் முளைவிடுத்து, கேள்வியெனும் கிளைகள் பரப்பி, தவமெனும் பண்பு தழைந்து, அன்பெனும் அரும்பு அரும்பி, நன்மலராய் அவிழ்ந்து மலர்ந்து போகத்துக்கு உயர்வானதோர் சுவைக் கனியாய் பழுத்தது போலும் என்றார். ஸ்ரீராமன் பிறந்த நன்னாட்டில் பண்பமர்ந்த தவத்தினர் பலர் இருந்தார்கள் என்று உபதேசித்தார் போலும்.

''ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகும் முதல் இண்பணை போக்கி அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பரும்பி தருமமலர்ந்து
போகம் கனி யொன்று பழுத்தது போலு மன்றே''

மறம் அடர்ந்த மானிடவாழ்க்கை மரத்தின் பண்பால் தெளியப் பெறின் அறமும் தவமும் நிறைந்த ஏகபோக ஆனந்தத்தில் மானிடம் திகழ்ந்திடலாமென்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ!!

தேவர் பணிந்தெழு தென்பரங்குன்றுறை பெருமானே
வாழ நிதம்புனையும்பதந் தந்துனது அருள்தாராய்

சிவமாவது எப்போது?

(அ. மு. பரமசிவானந்தம்)

'நீயும் நானுமாய் ஏக போக மாய்' இருக்கவேண்டும் என்று அருணகிரியார் ஆண்டவனை நோக்கி வேண்டுகிறார். அவர் வேண்டுகோள் அவரைச் சிவமாக்குகின்றது. இறையருளில் பற்றுள்ளங் கொண்ட உயிர்களெல்லாம் தம்மைச்சிவமாக்கும் தன்மைக்கே பாடுபடுகின்றன. சிவமாதல் என்றால் என்ன? இரண்டறக்கலத்தல் - இறைவன் வேறு உயிர் வேறு என்ற பிரிவு இன்றி தான் அவன் ஆதல்.

இந்தச் சிவமாம் தம்மை எப்போது இயலும்; யாரால் இயலும்? முயன்றால் அனைவரும் சிவமாகலாம். சிவம் என்றால் என்ன? அன்பு.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே'

என்பது திருமந்திரம். எனவே சிவம் வேறு அன்பு வேறு என்று பேசுதல் அறியாதார் செயல். அந்த அன்புடைமையே சிவமாவதற்குவழி. உயிர்களிடத்தே அன்புகாட்டி வாழும் வாழ்வே சிவவாழ்வு. இன்னார் இனியார் என்னுது வையத்து உயிர்களிடத்து எவ்வகை வேறு பாடும் காட்டாது, அனைத்தும் ஒன்று, எல்லாம் வாழவேண்டும் என்ற உணர்வில் அன்பினைச் செல்லுமிடமெல்லாம் செலுத்தி வாழ்வதே சிவவாழ்வு! அதுவே தவவாழ்வாகும், ஆனால் அவ்வாழ்வு வாழ்தல் அனைவருக்கும் எளிதன்று. 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்' அத்தன் அருள் வழி

திருப்பரங் குன்ற மேவு பெருமாளே
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே.

நின்று தனக் கெனவாழாப் பிறர்க்குரியாளர்களுக்கு அந்த அன்பு நெறி கைகூடும்.

அன்பு காட்டுவது எளிது. ஆனால் எல்லோரிடமும் காட்டுவது அரிது. உற்ற மனைவியிடத்தோ பெற்றமக்களிடத்தோ சில நாளாவது அன்பு காட்டி வாழாதார் இல்லை. எனினும் விரிந்த உலகை நோக்கி எல்லாரும் ஒன்று என்ற உணர்வில் அனைத்துயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் சித்தம் சிவ மானார்க்கே முடியும். அது தான் சிவமாதற்கு வழி! ஏன்?

சிவத்தின் தன்மை என்ன? சிவம் பார்க்குமிட மெங்கும் ஒருநீக்க மற நிற்கின்ற பரம்பொருள். அச் சிவம் வேண்டுதல் வேண்டாமைஇல்லாப்பரம் பொருள். உற்றாரும் மற்றாரும் எனப்பகுத்துக் காணாதவகையில் எல்லாரிடத்தும் எல்லாஉயிர்களிலும் ஒன்றிநிற்கின்ற பொருள். அச்சிவத்திற்கு எந்த ஜாதி, சமய, நிதி, நிற வேறுபாடுகள் கிடையா. ஆம். அதே சிவமாக வேண்டிய வர்களும் அந்த சிவத்தின் தன்மைகளையெல்லாம் அடைந் தால் தானே இயலும். உலகில் காணும் உயிர்களுக்குள் வேறுபாடு ஒன்றும் இல்லை என்பதை உளத்தால் உணர வேண்டும் உணர்ந்து அதன்படி செயலாற்றவேண்டும். தாம் பெறுகின்ற இன்பத்தை உலகில் உள்ள மற்ற எல்லா உயிர்களும் பெற வேண்டும், எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்க வேண்டும், எந்தவகை வேறுபாடும் காணாவகை யில் எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற உணர்வு உள்ளத்தே உதிக்க வேண்டும். அந்த நிலை வந் தால், அன்று உள்ளத்தே அன்பு முகிழ்க்கும். அன்பு, சிவ மாகும். சிவத்தோடு ஒன்றாகமுடியும். 'நீயும் நானுமாய் ஏகபோகமாய்,' வாழ்கின்ற வாழ்க்கை ஒவ்வொரு உயிருக்

செந்திற் குமரப் பெருமானே
சந்தப் பதம் வைத்து அருள்வாயே.

கும் இயலுவதாகும். ஆம். அறிவறிந்த உயிர் ஒவ்வொன்றும் அந்தப் பொய்யல்லா மெய்நெறிக்கே புக முயல வேண்டும். முயன்று அன்புகொண்டு அனைத்தையும் அவ் அன்பால் அணைத்து வாழின் அன்று சிவமாகலாம் இந்த உணர்வு பெற்று உயிர்கள் வாழ்வதாக !!

பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்

(க. சோமசுந்தர செட்டியார்)

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனருக்கு முத்தமிழ் விரகர் என்று ஒரு பெயருண்டு. இது சேக்கிழார் பெருமானர் திருவாக்கு. தமிழ் இனியமொழி என உலகினர் அறிவர். தமிழ் என்றால் இனிமை என்று பொருள்படும் என்பர் நச்சினர்க்கினியர். இத்தகைய இனிமையான தமிழ்மொழி மூவகைப்படும் என்பர் இலக்கணக்காரர். இவையாவன இயல், இசை, நாடகம் என்பனவாம். இம்மூவகையான தமிழையும் ஒரு திருப்பாட்டில் அமைத்திருக்கிறார் நம் ஆளுடையபிள்ளையாராகிய முத்தமிழ் விரகர். எனவே, இப்பெயர் அவருக்கு மிகவும் பொருத்தம். இதற்குச்சான்று, அவரருளிய பின்வரும் தேவாரப் பாட்டே யாகும். இதைக்கண்டு அதன் பொருள் நயத்தை யநுபவித்து மகிழ்வோமாக !

இந்தத் திருப்பாட்டில் இயல் தமிழ் உண்டு. இசைத்தமிழுண்டு. நாடகத்தமிழும் மிளிர்கின்றது; கூர்ந்து கவனிக்கவும்.

* * * *

மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்.

" வரைசேருமுகில் முழவமயில்கள் பலநடமாட வண்டுபாட
விரைசேர் பொன்னிதழிதரமென் காந்தள் கையேற்கும்
மிழலையாமே "

(திருவீழிமிழலை—பண்—மேகராகக்குறிஞ்சி)

ஒரு நாடக அரங்கைத் திருவீழிமிழலையில் காட்டுகிறார் நம் ஆளுடைய குழந்தை. அந்த அரங்கின்பின்னே நீலநிறம் பொருந்திய வானம் (திரை). மேல் விதானமாக (கூரை) கொன்றைமரங்கள் சூரியனை மறைத்து நிழல் தருகின்றன. நாடக மேடைமீது ஆண்மயிலும் பெண்மயிலும் மகிழ்ந்து ஆடுகின்றன. வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. இது சுருதிபிடிப்பதுபோல இருக்கிறது. நாடக மேடையின் எதிரில் ஒரு குளம். இதில் நாடகத்தைப்பார்க்கும் அன்பர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவை புள்ளினங்கள். நடனத்திற்குப் பொருத்தமாக மத்தளம் வாசிக்கப் படுகிறது (மலையின்மீது தவழும் மேகங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து செல்வதால் உண்டாகும் இடியாகிய சப்தம்). நாடக மேடைக்கு எதிரில் அமர்ந்துள்ளவர்கள் கைகள்போல விளங்குகின்றன ஐந்து விரல்கள்போல மிளிரும் காந்தள் மலர்கள். காந்த விசிறியில் வரும் காற்றுப்போல் தென்றல் காற்று வீசுகிறது. இதன் அசைவால் கொன்றைமரங்கள் அசைகின்றன. ஆனால் அன்று காலையில் மலர்ந்த கொன்றை மலர்களின் இதழ்கள் (வட்டமாகப் பவுன்போல உள்ளன) கைகள் போல் உள்ள காந்தள் மலர்கள்மீது உதிர்கின்றன. இக்

காட்சி நாடகத்தை மெச்சி உயர்ந்தோர் தங்கப் பதக்கம் கொடுப்பது போலவும் அவைகளைத் திறமை யுடன் நடிப்பவர் கைநீட்டி வாங்குவது போலவும் விளங்குகிறது.

இனி, இப்பாட்டின் பொழிப்பைச் சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

"மலைகளின் மீது தவழ்ந்து செல்லும் மேகங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் சத்தத்துடன் இடி யிடிக்க, மழைபெய்வதற்குமுன் இருள் நிறைந்திருக் கும் வேளையில் மகிழ்ச்சியினால் மயில் இனங்கள் தோகைகளை விரித்துக் கொண்டு ஆடல்புரிய, வண்டு கள் இடைவிடாது ரீங்காரம் செய்ய, வாசனை பொருந்திய பொன்னிறமுள்ள கொன்றை மலர்களின் இதழ்கள் காற்றின் அசைவால் கீழே உதிர, அவை களைக்கீழுள்ள காந்தள் மலர்கள் கைநீட்டி ஏற்றுக்கொண்டு விளங்கும் காட்சி நிறைந்தது திருவீழிமிழலையாகும்."

இந்நாடகத்தை நம் கண் முன் காட்டி நம்மை மகிழ்விக்கிறார் முத்தமிழ் வீரகர். இந்தத்தலத்தில் தான் திருமால் சிவபெருமானைப் பக்தியுடன் பூசித்த காலத்துப் பூசைக்காக சேமித்து வைத்த ஒரு தாமரைப்பூ குறைய, அதற்குப் பதிலாகத் தம் அன்பின் முதிர்ச்சியினால் திருமால் (தாமரைக் கண் ணன்) தன் கண்ணாகிய தாமரையைப் பறித்துப் பெருமான் திருவடியில் சமர்ப்பித்துப் பூசையை நிறைவு செய்தார். இவரது ஆற்றலுக்கு மகிழ்ந்த

திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமானே
படுதுயர் கண்பார்த்து அன்புற்று அருளாயோ.

சிவபரம்பொருள் அவருக்கு சக்ராயுதத்தையருளி ஞர். அந்நன்றியைப் பாருட்டித் திருமாலும் இறைவனுக்கு ஒரு ஒளிபொருந்திய விமானத்தைச் சமர்ப்பித்து அதில் இறைவனை எழுந்தருளியிருக்கச் செய்தார். பிரமாணம் பின்வருமாறு:

நீற்றினை நிறையப் பூசி, நித்தலாயிரம் பூக்கொண்டு.
ஏற்றுழியொருநாள் ஒன்று இறையக் கண்நிறையவிட்ட
ஆற்றலுக்காழி நல்கியவன் கொணர்ந்திழிச் சுங்கோயில்
வீற்றிருந்தருள்வர் வீழிமிழலையுள் விகிர்தனரே.

(அப்பர்)

செக்கர்வான் கடையோன் சேவடிக்கீழ் அந்நாளில்
மைக்கணிட்டுச் சக்கரம் நீபெற்ற விளையாட்டே போல்.

நாலாயிரப் பிரபந்தம்

(தொடரும்)

"தெய்வபக்தியும் மனிதவாழ்க்கையும்"

[ராமன்]

மனித உடலில் உயிர் வாழ்வதர்க்கு எவ்வாறு உணவு தேவையோ, அதுபோலவே, மனிதர்களின் மனச்சாந்திக்கு தெய்வ பக்தி இன்றியமையாதது. ஆதலால் மனச்சாந்தியை பெறுவதற்கு அவாவுள்ளவர்கள் தெய்வபக்தியின் வாயிலாக அதை பெறுவதர்க்கு முயற்சிக்க வேண்டும்.

பண்டிதர்களாயினும், பாமரர்களாயினும், செல்வந்தர்களாயினும், தரித்திரர்களாயினும், தெய்வபக்தியில்லாமலிருக்குமானால், மிச்சம் எந்த சுகம் கிடைக்கினும், மனச்சாந்தி கிட்டாது என்பதில் சந்தேகமில்லை. அத்

திருச் செந்தூர் வரு சேவக னேசுரர் பெருமாளே
விளித்து உன் பாதுகைநீதர நான் அருள் பெறுவேனே

தகைய தெய்வபக்திகை நாம் எவ்வாறு பெறுவது என்பது பற்றி இங்கு கொஞ்சம் கவனிப்போம்.

மனம் என்பது கண்ணால் காணமுடியாததும், அதன் உணர்ச்சியினாலேயே அதை உணர்ந்து அறியக்கூடியதும், ஒருவனது இன்ப வாழ்க்கைக்கும், துன்ப வாழ்க்கைக்கும், காரணமாய் மனிதர்களை நல்வழியிலும், தீயவழியிலும், செலுத்தக் கூடியதுமான ஒரு அபூர்வ சக்தி வாய்ந்த கருவியேயாகும். அதன் சுபாவம் எக்காலமும் ஏதாகிலும் ஒன்றைப்பற்றிச் சிந்தனை செய்து கொண்டேயிருக்கும். இத்தகைய சிந்தனைகள், நம் சுற்றுப்புறமுள்ள சூழ்நிலைமையையும், பழக்கவழக்கங்களையும், தழுவியே அமைகின்றன.

முன்காலத்து பலமகான்கள் இத்தகைய மனதின் நிலைமையை உணர்ந்து மனித வாழ்க்கையில், தெய்வீக வாழ்க்கைக்கு, முதல் இடம் கொடுத்து அதைக் கடைப்பிடிப்பதற்குப் ''பக்தி''யை முதலாவது துணைக் கருவியாகக் கையாண்டு வந்தனர். ஆனால் அன்னிய நாட்டு ஆதிக்கமும், பழக்கவழக்கங்களும் தாண்டவ மாடியதின் காரணமாக நம் அருள் செல்வமாகிய பக்தியின் மகிமை அடைத்து வைக்கப்பட்டது. ''அதை நாம் அழிந்துபோய் விட்டது'' என்று ஒருக்காலும் கூற முடியாது. அழிக்கவும் முடியாது. ஏன் என்றால், அழிந்துபோன இல்லாத பொருளை உண்டாக்குவது மிகவும் கஷ்டமல்லவா? ஆதலால் ''மறைத்து வைக்கப்பட்டது'' என்பதை இங்கு கூறப்பட்டது.

''உலகத்தில் தருமம் அழிந்து அதர்மம் பெருகும் காலம், அவ்வப்போது பகவான் அவதார வடிவமாகத் தோன்றி தருமத்திற்குப் புத்துயிர் கொடுத்து, அதர்

திருச்செந்தூர் நகரிக்குள் விளங்கிய பெருமாளே
உனத்தின் பார்வையிடத் தினிலோர்திட அருள்வாயே.

மத்தை அகற்றுவதற்க்காகத் தோன்றுகிறார்," என்று பகவத்கீதையில் கூறியுள்ளது. இதன்படி பல சத்திய சீலர்கள் அரசர்களாகவும், ராஜ தந்திரிகளாகவும் தோன்றி உலகத்தை சீர்ப்படுத்திய விஷயங்கள், புராணங்கள், சரித்திரங்கள் இவைகளால் நமக்கு தெரிய வருகின்றன.

மனித சமுதாயத்தின் நன்நெறியை விளக்கி, உண்மையை அடிப்படையாகக் கொண்டத் தெய்வீக வாழ்க்கைக்கு மனிதர்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக, பக்தர்கள், ஞானிகள், யோகிகள், தோன்றினர்.

யோகம், ஞானம் முதலியவைகளுக்கு பக்தியே சிறந்த துணைக் கருவியாதலால், பக்திக்கே முதல் இடம் கொடுக்க வேண்டுமென்பதில் சிறிதும் சந்தேகம் இருக்க மாட்டாது.

பக்தி யென்பது உலகத்தின் ஈசனுகிய பரம் பொருளை உள்ளம் உருகி, அத்தகைய பரம் பொருளை நாம் நம்பி வாழ விரும்பி, நம்மை அவரிடம் ஒப்படைக்கும் முறையில் தோன்றும், மனதின் ஒருவித உணர்ச்சியே யாகும். இந்த உணர்ச்சியில் எவ்வித சுயநல ஆசைகளுக்கும் இடமில்லை.

நாம் செய்யும் காரியங்களிலும், பேசும் பேச்சுக்களிலும் நிகழுகின்ற உண்மை, அல்லது பொய், இவைகளை நமது மனம் நமக்கு உணர்த்துகிறது. இந்த முறையில் பகவான் நம் மனதிலிருந்து நம்மை உணர்த்துகிறார் என்றும், நம்மை கவனிக்கிறார் என்றும் நாம் உணருவோமாயின், நம் தவறுகளை நாம் திருத்திக்கொண்டு, கடவுளைப் பக்தி செய்யும் காலம் அவர் நம்மை கை விடுவதில்லை. நம் காரியங்களும் இனியதாகவே நிறை வேறுகின்றன;

கொந்தளிக்கும் செந்திலில் தங்கும் குமரேசா
உன்தன் பதத்து இன்பம் தருவாயே.

இந்த உயர்ந்த அருள் செல்வத்தை நாம் எந்த ஒரு அவதார வடிவத்தில் பக்தி செய்கிறோமோ, அந்த வடிவத்தில் கடவுள் நமக்குத் தோன்றி நம்மைக் காத்துக் கொள்ளுவார் என்பதில் சந்தேகமில்லை.

"ஒருவன் எந்த வடிவத்தில் என்னை பக்தி செய்கிருனே, அந்த வடிவத்தில் அவனுக்கு நான் தோன்றி அவன் விரும்புவதைப் பூர்த்தி செய்கிறேன்" என்று பகவத்கீதையில் கூறியுள்ளது. இது விஷயத்தில் சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, முருகன் என்றோ, தேவி என்றோ உயர்வையோ தாழ்வையோ கற்பிப்பது தவறு. அதனால் பாபமும் கெடுதலும்தான் நேரும் என்பதும் தெளிவாயிற்று.

பக்தி மார்க்கத்தை மந்திர ஜபத்தின் வாயிலாகவும், கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு பஜனை செய்வதனுலும் பெறலாம். இவைகளில் மந்திரஜபம் மௌனமாக நடைபெறுவதிஞல் எல்லோருக்கும் இதை கேட்டறிந்து அனுபவிப்பதற்குச் சாத்தியமில்லை. ஆதலால் கீர்த்தனம் பாடி பஜனை செய்வதிஞல் எல்லோருக்கும் செவி கொடுத்து கேட்டு அனுபவிப்பதற்கு இடமிருப்பதனுல் அநேக மனிதர்களுக்கு இதில் கலந்து கொள்வதற்கும் இடமுண்டு.

இசையுடன் கூடிய கீர்த்தனைகளின் மதுரமான நாதரஸம் எல்லோராலும் பருகப்பட்டு அவர்களை பக்தியில் இறக்கி விடுகின்றது.

இந்த உண்மையை அனுபவித்தறிந்த மகான்களாகிய தியாகராஜர், அருணகிரியார் போன்ற இன்னும் பலர் உலகத்தின் ஞாபகச் சின்னங்களாகவும், லக்ஷியபுருஷர்களாகவும் விளங்குகின்றனர்.

செங் குறததிக்கன் புறச்சித்தம் தளர்வோனே
புகழ்ச்சிக்குள் க்ருபை சித்தம் புரிவாயே.

இத்தகைய மகான்கள் நமக்குத் தந்தருளிய கீர்த்தனைப் பொக்கிஷத்தை வைத்துக்கொண்டு, பயன் படுத்தாது இதுவரையில் வாழ்ந்து வந்தது "அரிசியை வைத்துக் கொண்டு பட்டினி கிடப்பது" என்பதற்கு ஒப்பிட வேண்டும். இது விஷயம் அறிந்த பல அறிஞர்களும் அவர்களின் அறிவை அவர்களிடத்திலேயே மூடியும் வைத்திருந்தார்கள் என்றே கூறவேண்டும்.

இந்த நிலையில், உலகானுபவமும், அறிவும், தெய்வ பக்தியும் ஒருங்கே சேர்ந்த பேரறிஞர் ஸ்ரீமான் "திருப்புகழ்மணி" அவர்கள், உலகத்திற்குப் பக்திமார்கத்தைப் பரப்பி அறிவை வளர்த்து மனிதர்களை தெய்வீக வாழ்க்கைக்குக் கொண்டுபோய் சேர்க்கும் கைங்கரியத்தை ஏற்றுக்கொண்டு பக்தி மார்க்கத்துக்கும் புத்துயிர் கொடுத்து வருகிறார் என்பதை எவ்வளவு தடவை கூறினாலும் மிகையாகாது.

அத்தகைய மகானைப்பின்பற்றி பாமரமக்களுக்கு பக்திமார்க்கத்தைப் பரப்பி, தெய்வீக வாழ்க்கையின் உயர்வையும், பொதுஅறிவையும் உணர்த்தி வளர்ப்பதற்காக, "அமிர்தவசனி" என்ற பத்திரிகையும் சேவை செய்து வருகின்றது.

இவைகளின் வாயிலாக எதிர்காலத்தில் ஒரு உண்மையான, சக்தி வாய்ந்த பரம்பரை தோன்றி உலகம் புத்துயிர் பெறுமென்பதில் சந்தேகமில்லை. நாம் எல்லோரும் இந்தகைய மகான்களின் சேவையை உணர்ந்து அவர்களின் அடிச்சுவடைப் பின்பற்றி நடப்பதையே கடமையாகக் கொள்வோமாக.

தாரைவே லுந்திடும் பெருமாளே
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்

சொற்பெருஞ் பொருட் கடல்

5. 6. ஆம் முத்துக்கள்

பொன்னன் என்பதும் சொன்னன் என்பதும் முருகனது திருப்பெயர்கள்.

கந்தரனுபூதியில் 27ஆவது செய்யுளில் "பொன்னே மணியே பொருளே அருளே" என்ற அடியில், பொன்னே என்ற விளி—பொன்னனே என்பதன் இடைக்குறையாம்.

கந்தரலங்காரத்தில் பத்தொன்பதாவது செய்யுளில், "சொன்ன கிரௌஞ்ச கிரியூடுருவத் தொளைத்த வைவேல்" என்ற அடியில் "சொன்ன" என்பது அண்மை விளியாம். மன்ன, மார்ப, என்பனவும் அண்மை விளியாதல் காண்க.

"குருகு பெயர்பெற்ற கனவடசிகரி" என்ற திருவகுப்பிலும், "கனகக்கிரியைப் பொரும் வேலா" என்ற திருப்புகழிலும், பிறவிடங்களிலும், பொன்னஞ்சிலம்பு என்றவாறே "சொன்ன கிரௌஞ்சகிரி" என்ற விடத்துஞ்சொல்லத்தான் வேண்டும் என்பது நியமமல்லவே.

பின்னை பொன்னன், சொன்னன், என்பனவற்றிற்குப் பொருள் என்னையோ வெனில் அவ்விரண்டு சொற்களுக்கும் "பொன்னை உடன் பிறந்ததாக உடையவன்" என்பதே பொருள்.

வியாசமுனிவர் மகா பாரதத்தில் அநுசாசன பர்வத்தில் முருகன் பெருமையையும், பொன்னின்

செங்கண்மால் பங்கஜா னன்தொழா நந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே! வந்துநீ அன்பிலான் வாய்.

பெருமையையும் ஒருங்கு சேர்த்துக் கூறும்போது "தஸ்மாத் சுவர்ணம் மங்கல்யம் ரத்னம் அக்ஷய்யம் உத்தமம்! சஹஜம் கார்த்திகேயஸ்ய வஹ்னே: தேஜ: பரம் மதம்" என்கிறார்.

பொன்னிற்குக் "கார்த்திகேய ஸஹஜம்" என்ற பெயர் முருகனோடு பிறந்ததாலானது. முருகனும் தன்னுடன் பிறந்த தன் நினைவு அன்பர்க்கு வரும் பொருட்டுத்தன் பெயர்களாகப் பொன்னன்—என்பதையும், சொன்னன் என்பதையும் சூட்டிக் கொண்டார்.

சிவபெருமானது நெருப்புக்கரு, பொன்னாகித் தானிருந்த மலைப்பக்கங்களை யெல்லாம், விளங்கச் செய்தது என்பதும், அந்நெருப்புக்கருவே பொன் என்பதும், அது உருவெடுத்தது ஆதலின் அதற்கு ஜாதரூபம் எனப்பெயர் வந்தது என்பதும், ஆடகமும் கிளிச்சிறையும் சாம்பூநதமும், ஆகிய இம் மூவகைப் பொன்னும், முருகனுடன் பிறந்த ஜாதரூபம் என்னும் பொன்னினின்றும் பிறந்தனவாம் என்பதும் இங்கு அறியற்பாலன.

சிவபிரான் அஷ்ட மூர்த்தி ஆவதும், தீயுருவினன் ஆவதும், பொன்னார் மேனியனாவதும், பலரும் அறிந்த செய்திகளே. பொன்னார் மேனியன் புதல்வன் பொன்னனாவதும் இயற்கையே!

முருகனுக்கு அக்கினிமகன் என்ற பொருளில் ஆக்நேய: என்றுள்ள பெயரும், பொன்னுக்கு நெருப்பினின்றும் பிறந்தது என்ற பொருளில் ஆக்கி

மகிமை மாநகர் செங்கிலில் வந்துறை பெருமாளே
உபயசிதள பங்கய மென்கழல் தருவாயே

நேயம் என்றுள்ள பெயரும்—பொன் முருகனுடன் பிறந்ததை மெய்ப்பிக்கும்.

பொன்னைத் தன்னுடன் பிறந்ததாக உடையவனிடமிருந்தே பொன் முதலாயினவும் பெறுவது தகுதி. ஆதலின் வியாசற் வனபர்வத்தில்,

" அர்க்க புஷ்பைஸ்து தேபஞ்ச கணு: பூஜ்யா தனுர்த்திபி:" என்றார்.

அந்தஸ்கந்த கணங்கள் பொன்னை விரும்புவோரால் பூசிக்கத் தகுந்தவை என்பது அச்சுலோகத்தின் அடியின் பொருள். பொன்னை உடையவன் தன் பக்தர்கட்கெல்லாம் பொன்னை வழங்குவது இயல்புதானே! முருகன் பொன்னளித்து வருவது பக்தர்கள் யாவர்க்கும் தெரிந்த விஷயமே!

வான்மீக முனிவரும் குமரோத்பத்தி சருக்கத்தில் சிவபிரானது நெருப்புக் கருவினின்றும் முருகன் அவதரித்தான் என்று சொல்லும்போது அம்முருகனோடேயே அந்நெருப்புக்—கருவினின்றும், அந்த இமயமலை எங்கும், பூமியெங்குங்கூடவாகவும், பொன்னும் பல தீப்பொறியருவிகளாகப் பரவிற்று என்றும், அதுமுதற்கொண்டே பொன், ஜாதரூபம் எனும் பெயரும் பெற்றது என்றும் சொல்லுகிறார்.

அப்பொன் முருகனுடன் தோன்றிப் பரவிய காலத்துப் புல்லும், மரமும், கொடியும், புதரும், எல்லாம் பொன்னாயின என்ற பொருளில்,

" த்ருணவ்ருக்ஷலதா குல்மம் சர்வம் பவதி காஞ்சனம்" என்று வியந்து கூறுகிறார். முருகனது

அவதாரகாலத்திற்முன் சிவபிரானது நெருப்புக் கருவினின்றும், பொன்னும் செம்பும் காரிரும்பும் முதலிய பல்வகைத் தாதுப்பொருள்கள் பூமியெங்கும் பரவின.

அத்தாதுப் பொருள்களின் மாசுண்பகுதிகளே திரபு ஈயம் முதலாயின வாகத்தரையில் தங்கின என் பனவையும் அவ்வான்மீகியின் மொழிகளால் புலப் படுவனவாம்.

பொன்னேபோல் போற்றிக் கொள்ளத் தக்கவன் முருகன் என்பது பொன்னின் செய்தியால் தெரிய வருவது.

சொற்பெரும் பொருட் கடல் 7 ஆம் முத்து

பூர்வஜ: என்பதும், (முன்னோன்) முன்னேயே தோன்றிய முருகன் திருநாமங்களிள் ஒன்று.

இராமாவதார காலத்திற்கும் முந்திய காலமாகிய வைவச்வதமனுவின் காலமான பூர்வகாலத்தில் முருகப்பிரான் அவதரித்தவன். அக்காலத்தில் நம் நாட்டில் முருகனுடன் பிறந்த பொன், நாவலந்தீவு முழுதும் பரவி மற்றைத்தீவுகளிலும் கண்டங்களிலும் பரவிற்று

முருகன் நம் நாட்டில் கோவிலெங்குங் கொண் டதுபோலப் பிறநாடுகளில் கோவிலெங்குங் கொள்ளு வது எந்நாளோ? முருகன் கல் தோன்றிய காலத்தி லேயே இந்தியர்க்கும் தமிழர்க்கும் வழிபடு கடவுள் ஆயினன் என்பது கண்டின் புறம்பாலது.

தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீகந்தனை த்
தந்துநீ அன்புவைத்து அருள்வாயே.

சொற்பெரும் பொருட் கடல். 8 ஆவது முத்து

சுவாகேயன் என்பது முருகன் திருநாமங்களுள் ஒன்று. இதன் பொருள் சுவாகாதேவிக்குச் சேர்ந்தவன் என்பது பொருள்.

அக்கினி பகவானுக்கு வாழ்க்கைத் துணைவியான சுவாகாதேவி, முருகப் பிரானிடஞ் சரணடைந்து "என்னை என் கணவன் விரும்பவில்லை. நான் அவர் தம்மை என்றும் பிரியாதிருக்க விரும்புகிறேன. வரந்தருக என்று வேண்டினள்."

முருகப் பிரானும் சுவாகாவைப் பார்த்து இந்—றொடி முதலாகச் சான்றோர்கள் தேவர்களுக்குகாகவோ, பித்ருக்களுக்காகவோ அக்கினியில் ஹோமம் செய்யும்போது உன் பெயரான சுவாஹா என்ற பதத்தை மந்திரத்தோடு சேர்த்துச் சொல்லி ஹோமஞ் செய்வார்கள். அக்கினி பகவானும் உன்னைக்காதலிப்பார் என்று சொல்லி அவளை அவள் கணவனோடு வாழச்செய்வதாகிய வரமளித்தார். சுவாகாதேவியும் இன்புற்றாள். முருகனும் அது முதலாக ஸ்வாஹேயன் எனவும் ஒரு பெயர் கொண்டருளினான். இந்திராயஸ்வாஹா, விஷ்ணவேஸ்வாஹா, ருத்ராயஸ்வாஹா, என்ற மந்திரங்கள் எல்லாம் முருகனுணையால் பிறந்தவை. முருகப்பிரான் பிரமணியன் ஆனவனல்லவோ.

முத்தலவு வேலைநகர் முததேவர் பெருமானே
வஜ்ரமயில் மீதிலினி யெப்போது வருவாயே.

அடியார் பெருமை

(என். எஸ். இராமச்சந்திர அய்யர்—ஸ்கந்தநிகேதனம் ஆனமலை ரோட்)

உலகம் உய்யும்பொருட்டு உலகநாதனுகிய இறைவனை மெய்யன்புடன் வழிபட்டு வந்தவர்களையும் வருகின்றவர்களையும் நாம் அடியார்கள் என அழைக்கின்ருேம். ஆணவமெனும் இருள் அவர்கள் அகத்தினில் சற்றும் இராதாகையால், அதன் அறிகுறிகள் ஆகிய பகையும் சினமும் அவர்களிடம் இரா. அவர்களது இதயத்தில் எவ்வுயிர் மீதும் அன்பும் தயையுமே பொங்கிக் கொண்டிருக்கும். அவர்களது பிறவியின் நோக்கமே பிறர்க்குதவுபுரிந்து பேரின்ப முறுதலாகும்.

இன்னும் அடியார்கள் தங்கள் மனதை ஆண்டவன் அடிகளில் ஆழப்பதியவைத்தவர்களாகையால், வாழ்வு தாழ்வு உற்றபோதும் சிறிதேனும் மனச்சோர்வு கொள்ளார். இருந்தபடி இருப்பார். செய்வினை அனைத்தினையும் ஈசன் சேவடியில் அர்ப்பணம் செய்வார். அனுஸக்தி யோகத்தைக் கடைப்பிடித் தொழுகுவார்.

"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்பாடும் பணியே" பணியாய்க் கொள்வார். "பரமானந்தம் மேற் கொள விம்மி விம்மி" நடிப்பார். எவற்றிலும் ஈசனின் இன்னுருவையே காண்பார். எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணுவார். குழந்தைகளைப்போல் சூதுவாது அற்றிருப்பார். சிலவேளைகளில் பித்தரைப்போல் பிதற்றுவார், குதிப்பார், சிரிப்பார். பணிவின் வடிவினராகவே பாரினில் திரிவார்.

செந்திநகர் வாழுமரு மைத்தேவர் பெருமானே
வந்தடிமையாள இனி எப்போது நினைவாயே

"ஆடுவதும் பாடுவது மானந்தமாக நின்னைத் தேடுவது நின்னடியார் செய்கை பராபரமே." "பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே" என்றல்லவா ஸ்ரீதாயுமான சுவாமிகள் அடியார்களின் செய்கையைப்பற்றிக் கூறியுள்ளார்.

புண்ணிய பூமியாகிய நம் பரத கண்டத்தில் வாழ்ந்த பிரசித்திபெற்ற அடியார்கள் எத்தனை! இக்காலத்தும் நம் நாட்டில் எத்தனையோ அடியார்கள் இருக்கிறார்கள். எதிர் காலத்திலும் எத்தனையோ அடியார்கள் தோன்றப் போகின்றனர். அடியார்கள் இல்லாவிடின் இவ்வுலக வாழ்க்கை நகரவாழ்க்கையாகவே மாறுவது திண்ணம். மாந்தர்தம் அகத்தோங்கும் விலங்கின உணர்ச்சிகளை அறவே அழித்து தெய்வீக சம்பத்தை வளர்க்கவேண்டுமாயின் அநேக அடியார் சங்கங்கள் கிளம்பவேண்டும். தரணியில் தருமநெறி தழைத்தோங்க வேண்டுமாயின் அடியார் கூட்டம் பல தோன்றவேண்டும். சுயநலமிகளின் பிடிப்பிலிருந்து உலகம் விடுதலை பெறவேண்டுமாயின் அடியார் கூட்டம் பெருகவேண்டும். ஆஸ்திகபுத்தி, சகோதரமனப்பான்மை, துவேஷமின்மை, தானம் தவம், தத்துவ ஞானம் முதலியன வளர வேண்டுமாயின், அடியார் கூட்டம் வலுப்பெற வேண்டும்.

தற்போது சென்னையில் பிரதி ஞாயிறும் நடந்தேறி வரும் அடியார் கூட்டம் ஆண்டவனின் நன்கொடையே என்றுதான் நாம் எண்ண வேண்டும். ஒவ்வொருவர் உள்ளத்தும் ஒளிர்கின்ற அருட்பெரும் ஜோதியை மறைப்பது ஆணவமெனும் அகங்காரமே. ஆணவம் அழிந்தால் பரமான ஜோதி எங்கும் பரவியிருப்பது விளங்கும். அகங்கார நோயை மாற்றத் தகுந்த வைத்தியர்கள் ஞானபண்டி

செந்திநகர் வாழும் ஆண்மைக்கார பெருமாளே
செம்பொன் மயில்மீதிலே எப்போது வருவாயே.

தனின் அடியார்களே. அறுமுகவன் அலங்காரம், அநுபூதி, அந்தாதி, திருப்புகழ் முதலிய மாத்திரைகளைக் கிரமமாய் உண்டுவரும் அன்பர்களை ஆணவ நோய் அணுகுமோ. நம் நாட்டு வானத்தின்கண் தற்போது தோன்றியுள்ள சண்டை சச்சரவுகளாகிய கார்முகிற் கூட்டங்கள் விரைவினில் சிதறுண்டுபோகும். ஏனென்றால் திருப்புகழ் மணி போன்ற அநேக ஞானதினமணிகள் வானத்தின்கண் ஒளி வீசத் தொடங்கிவிட்டனர். ஆகையால் நாம் அச்சமுறத் தேவையில்லை.

உலகத்தில் அமைதியை நிலைபெறச் செய்வது அடியார்களே. 'ஆண்டவன் அருளை நாடுவோர்கள் எளிதில் அதனைப்பெற உதவுவது அடியார்களே. ஆதலால் அடியார்க்கடிமை ஆதலே ஆன்மவளர்ச்சிக்கும் பேரின்ப பேற்றிக்கு முகந்த எளிய வழி.

“அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே” என்ற அமுத மொழியைக் கவனிப்போமாக.

அடியார்களின் சரித்திரங்களைப் படிக்கும் பொழுது நம் மனம் எவ்வளவு ஆனந்தமடைகிறது. நாமும் அவர்களைப்போல் ஓர் உண்மைத் தொண்டனாவது எக்காலம் என்ற எண்ணங்கள் மனத்தின்கண் எழுகின்றன வல்லவா? இந்த எண்ணங்கள் நிறைவேற வேண்டுமாயின் அடியார் சகவாசம் இன்றியமையாதது. அவர்கட்கு எப்பணியாற்றுவதற்கும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். உடல், பொருள், ஆவி என மூன்றினையும் அவர்கள் பால் அர்ப்பணம் செய்யவேண்டும். அடியார் பணியே அரனார் பணி என்ற திடஞானம் உதிக்கவேண்டும்.

அலைவாயுகந்த பெருமாளே
குறைதீர வந்து குறுகாயோ

"சித்தந் தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்குங் கொத்தடிமையான குடிநான் பராபரமே" என்ற மேலாம் கருத்தினை அநுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டும். ஆகையால் அடியார் கூட்டமே நமது திருக்கோவிலாகுக. அதற்கே பணியாற்றுவாம். அதுவே நமக்குற்றதுணை! சீரிய கதியும் அதுவே.

"சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் றொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்டண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற்றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே"

ஆதலால் நெஞ்சே,

1. கந்தவுன் கழன்மலர் பணிவார்க்கு மடியேன்
கசிந்துநின் திருப்புகழ் பாடுவார்க் கடியேன்
சந்தமிகு நின்புகழ் கேட்பார்க்கு மடியேன்
சந்தமும் நின்மனுவைச் சாற்றுவார்க் கடியேன்

2. தென்பழனி சென்றுனைத் தொழுவார்க்கு மடியேன்
தேவநின் சீர்பேசும் செல்வற்கு மடியேன்
அன்புடனே யபிஷேகம் செய்வார்க்கு மடியேன்
அழகுறு மலங்காரஞ் செய்வார்க்கு மடியேன்

3. அடியவர்க் கன்னமதை யிடுவார்க்கு மடியேன்
ஹரஹரா வென்றுனைப் போற்றுவார்க் கடியேன்
படிமீதி லுன்கீர்த்தி இசைப்பார்க்கு மடியேன்
பதபக்தி தனையெங்கும் பரப்புவார்க் கடியேன்.

4. காவடிகள் எடுத்தாடும் அடியார்க்கு மடியேன்
கரங்குவித் துன்முன்னர் நிற்பார்க்கு மடியேன்
சேவடியிற் சென்னியுற வணங்குவார்க் கடியேன்
சிந்தையினில் உனையெண்ணும் மேலோர்க்கு மடியேன்

மறையவுயர் கரையிலுறை பெருமாளே
திருவடியில் அனுகவரம் அருள்வாயே.

5. பாமாலை சூட்டியுனைப் பரவுவார்க் கடியேன்
பரிவுடன் நின்பூசை புரிவார்க்கு மடியேன்
சீர்மேவு பதிதோறுஞ் செல்வார்க்கு மடியேன்
சீலமிகும் தொண்டர் தமைச் சேவிப்பார்க் கடியேனை
என்று அனவரதமும் உருகிப்பாடி
மேலாம் கதியைப் பெறுவாயாக !

சுபம்—சுபம்—சுபம்.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

(4-ஆம் பை)

முதற்காசு: அடியார் வேண்டுவதை அப்பொழுதே
அருளுவது, ஆண்டவனியல்பன்றோ.

பகவான், நாராயணன், பிரபு, ஸ்ரீபதி, என்ற திவ்யமங்களத் திருநாமங்களுடைய திருமால், சர்வஞான மகாவிபூதியுடன் கூடினவராய்த் தேவகீ வசுதேவருடைய முற்பிறவிப் புண்ணியங்களால் தேவகிக்குக் குழந்தையாகி, ஆயிரங்கோடி சந்திர சூரியர்களுக்கு ஒப்பான தேஜஸினால், பிரசவ அறையையே விளங்கி ஒளிருமாறு செய்து கொண்டிருந்த வேளையில் பெற்றோராது அன்பு அமிழ்தக் கடல் நிலவான, வாசுதேவரைப் பார்த்து, அத் தேவகி "சர்வேசுவரனை நீர் என்கர்ப்பத்தை அடைந்தீர்" என்ற இது, அடடா! மனித உலகின் பரிகாச மாகுமல்லவா !, ஆதலால், உலகியலுக்கு அப்பாற்பட்டதான இவ்வுருவத்தை மறைத்து மானிடத்திருக் கோலம் கொண்டருளுமே நீர், என மன்றாடவும், அவ்வசுதேவர் சர்வாதார புருஷா! ரமாபதே! காவலாளர், நீர் பிறந்ததைத் தெரிவிக்கக் கம்ஸன் வாளேச்சிய கையுடையனாய் வந்துவிடுவானே! "பிரமணியத்தைக் காக்கும் துறையில் எது செய்யவேண்டுவதோ அதனை நீர் எண்ணுமே! இப்படிப்பட்ட-அமானுஷமான-முனி

அஞ்சும் இமையவரை அஞ்சல் என்ற பெருமாளே
மலரடி வணங்க என்று பெறுவேனோ

வரால் இயானிக்கத்தகுந்த புருஷோத்தம ரூபத்தை மறைத்துக் கொண்டு எங்கட்கு மானிடக் குழந்தைக் கோலத்தைக் காட்டி யருளுமே" என வேண்டவும், ஸ்ரீஹரியானவர் அப்பெற்றோர் பார்த்துக் கொண்டிருக்கும் போதேயே, மௌனமாக ஆத்ம மாயையினால் மண்ணுலகத்துக் குழந்தை என உடனே மாறி நின்று காட்சி தந்தருளினர். பக்தியாகிய பொருளால், பக்தர்களால் விலைக்கு வாங்கப்பட்டவன் போல, நடிப்பதும், அவனது திரு விளையாட்டன்றோ.

2 ஆம்காசு. வல்லான் வகுத்ததே வாய்க்கால்.

பகவானது கட்டளை அடியில் வருமாறு பிறந்தது. தேவாதி தேவனான ஈசுவரனென்று என்னை நினையும்! வசுதேவரே, நந்த கோகுலத்திலிருக்கும் என் யோகமாயையை இவ்வடமதுரையில் இங்கு வைத்து விடும். என்னை நந்த கோகுலத்தில் சேர்ப்பித்து விடும். காவலாளர்கள் தூங்கிவிடுவர். வாசல்கள் தாமே திறந்து கொள்ளும். யமுனையாறு வழிவிடும், என்பதே அக்கட்டளை. வசுதேவர் உடனே புறப்பட நினைத்தார். அதேவேளையில் நந்த கோபரது திருமனைவியாரான யசோதா தேவியாரிடம் யோகமாயை பிறந்தாள். வாசல் காப்பவர் தூங்கிவிட்டனர். நகரத்து மக்களும் அந்நள்ளிரவில் உறங்கினர். இரும்பு முளை, சங்கிலி, என்ற இவற்றால் அசைக்க முடியாதபடி பெரியகதவுகள் மூடப்பட்டிருந்தன. அவையெல்லாம், வசுதேவர் கண்ணனை அன்னக் குஞ்செனத் தூக்கி வந்ததுமே பகலவனைக்கண்ட இருளெனத்தாமே திறந்து கொண்டன. மேகம் மெதுவான இடியொலியுடன் மழை பொழிந்து கொண்டிருந்தது. ஆதிசேடன் ஆயிரம் படங்களையும் விரித்துக்கொண்டு "சென்றால் குடையாம்" என்னும்திருப்பணியை வசுதேவரைப்பின்தொடர்ந்துசெய்துவந்தான். ஆயிரம்நாகரத்தினங் களும், ஆயிரம் விளக்கிட்டாற் போலப் பேரொளி வீசின. வழி தெரிந்துகொண்டார் வசுதேவர். நுரைகளும், அலைகளும் நூற்றுக்

மாமணி நூபுர சீதள தாள்தனி
வாழ்வுற ஈவதும் ஒரு நாளே.

கணக்கான சுழல்களும் வளைவுகளுமாய்க் காணப்பெற்ற அவ்விய முனு நதி வரிவிலோனுக்கு வாரிதியாம் கடல் வழி தந்தது போல மேற்குப்புற நீர்ப்பரப்பு மேற்கிலும், கிழக்குப்புற நீர்ப்பரப்பு கிழக்கிலுமாகக் கற்சுவர் எனநின்று வசுதேவர் செல்லும் வழி மென்மணற்பாதையாகத் தன்பணி செய்தது. இறைவன் செயல்கள் யாவுமே வியப்பு விளைப்பனவாக இவ்விஷயத்தில் ஆச்சரியம் ஏது? ஒன்றுமே யில்லை.

3, ஆம்காசு. மகாமாயை ஞானிகளையே

மோகமடையச் செய்யும் போது, அஞ்ஞானி
களிடம் அவன் செயல் சொல்லவா வேண்டும்.

வசுதேவர் நந்தகோகுலஞ் சேர்ந்து அங்கு அந்தக் கோபாலர்கள் மாயையினுல் தூங்குவதைப் பார்த்துத்தனது குழந்தையாம் கண்ணனை யசோதையின் படுக்கையில் வைத்து அவளது புதல்வியாகிய யோகமாயையை மெதுவாக எடுத்துக் கொண்டு திரும்பி வீடுவந்து சேர்ந்தார். பிறகு வசுதேவர் பெண்ணைத் தேவகியின் படுக்கையில் விட்டுக்கால்களில் விலங்கை மாட்டிக் கொண்டு முன்போலச் சிறையிலிருந்தார். மாயையினுல் ஞாபக மில்லாமற் களைத்து நின்ற நந்த கோபர் மனைவியான யசோதையோ குழந்தை வயிற்றின் வெளிவந்ததை அறிந்தாளே யல்லாமல் அது புருஷப் பிரஜையா? ஸ்த்ரீப்பிரஜையா என்றும் அறியாதிருந்தாள்.

வெளியிலும் உட்புறத்துமிருந்த வாசல்களெல்லாம் முன் மாதிரி மூடிக்கொண்டன. பிறகு குழந்தையின் "குவா"க் குரலைக் கேட்டுக் காவலர் எழுந்து போஜராஜனுன கம்சனுக்கு அறிவித்தார்கள்.

உறக்கஞ்சற்றே நீங்கிய கஞ்சன் (கம்ஸன்) செய்தி கேட்டதுமே தலைவிரி கோலமாய்த் தமோற்றமும் அச்சமும் மேலிட்டுக் குழந்தை பிறந்த அறையை நோக்கி ஓடிவந்து, விறைத்துப் பார்த்தான்.

அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னென மொழிய வருவாயே.

அவ்வேளையில் கம்ஸனைக்கண்டு தேவகி, அண்ணா! உனக்குப் பலகோடி நமஸ்காரம். இது பெண்குழந்தை. உன் மருமகள் இவள். நான் உன் தங்கை யாகவில்லையா? இந்தக் கடைக்குட்டியைப் பிச்சையாகத்தந்தால் கோடி புண்ணிய முண்டு என்று குழந்தையைஅணைத்துக்கொண்டே கெஞ்சினாள். கம்ஸன் வெடுக்கெனப் பிடுங்கினான், கற்பாறையில் அடித்தான். தன்னலம் காணும்போது தங்கை ஏது? உறவேது? திருமாலுக்கு இளையளான அந் நாராயணி கம்ஸன் கையினின்றும் விடுபட்டுத் தாளால் கம்ஸனை உதைத்து வானில் சென்று துர்க்காதேவியாக அமரர் பின்வருமாறு வாழ்த்தினார்கள். சுந்தரியே வெல்க! வைஷ்ணவியே வெல்க! சங்கரியே வணக்கம். கல்யாணியே வணக்கம், நந்தன்புதல்வியே போற்றி! காரணியே போற்றி! என்ற அந்த ஜய கோஷமும், நமச்சப்தமும் வானைப்பிளந்தன.

அந்த ஜகன் மாதாவான யோக மாயை கம்ஸனைக் குறித்து அடே மடையா! உன் பழைய பகைவன் எங்கோ பிறந்திருக்கிறான். ஒன்று மறியாதவர்களை வீணிலே இனிக் கொல்லாதே! என்றதட்டி மறைந்து பலஸ்தலங்களிலும் பக்தர்கட்கு அருளத் திருக்கோயில் கொண்டருளினாள்.

4 ஆம் காசு. மகா மாயையின் அருள்.

கம்ஸன் அந்த யோக மாயை சொன்னதைக் கேட்டுத் தேவகியையும், வசுதேவரையும், சிறையினின்றும் விடுவித்து இருவரையும் பார்த்து "மகாபாவியானேனே! அரக்கனானேனே! பல குழந்தைகளையும் கொன்றேனே! பிரமகத்திசெய்தவன் போல எல்வுலகங்களுக்குப் போவேனோ! தெய்வம் பொய்யும் சொன்னது, அதை நம்பி மோசம் போனேனே! தைவாதீனம் தான் இவ்வுலகம். பிராரப்த கர்மபலன்களை அக் குழந்தைகள் அனுபவித்தன. உயிரனைத்தும் தன்னுரிமையற்றுத் தம் வினைப்பயன்களை அனுபவிக்

நோய் கலந்த வாழ்வுறாமல் நீ கலந்துளாகுஞான
நூலடங்க வோத வாழ்வு தருவாயே.

கின்றன. உடல்களே அழிகின்றன. ஆன்மா ஒரு விகாரமும் அடைவதில்லை. தேகத்தில் ஆத்மபுத்தி கொள்வது பேதைமை! என்கொடுமையை மறந்துவிடுங்கள். "சாதுக்கள் ஏழைகளின் அன்பாலல்லவோ என்று சொல்லிக் கொண்டு கண்ணீர் விட்டவனும் அத்தேவகி வசுதேவர்களின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு வணங்கி விலங்குகளையும் கழற்றி அவ்விருவரையும் போக விடை தந்தான்.

வசுதேவரும், பொருள்களால் பொருள்களை அழிக்கும் பரம்பொருளான ஈசுவரனை வேற்றுமையறிவு கொண்டவர் பார்ப்பதில்லை, நானே கொன்றவன் என்றும், கொல்லப்பட்டவன் நானே என்றும், எண்ணித் தமோறுகின்றனர் என்றார். கம்ஸனும் தெளிவு பெற்றவனாய் மனச்சாந்தியுற்று தன்வீட்டுள் புகுந்தான்.

5 ஆம் காசு :- பெரியோர் பகை நலமெல்லாங்கெடுக்கு மன்றே.

அன்றிரவு கழிந்ததும், கம்ஸன் பொல்லாத மந்திரிகளுடன் நடந்த செய்திகளைப் பேச அவர்களும் கெடுமதி புகட்டினார்கள். நகரம், சிற்றூர், ஆயர்பாடி, முதலியவற்றிலுள்ள பல் முளைக்காதன முதல் குழந்தைகள் அனைத்தையும் கொன்றிடுவோமே. தேவர்கள் போரில் ஓடவில்லையா? திருமால்தான், அச்சிவன்றான், அந்த இந்திரன்தான், அத்தவசி பிரமன்தான், யார்தாம் என்ன செய்ய முடியும். சிறு தீப் பொறியையும் அசட்டை செய்ய முடியாது. உடனேயினை உபேக்ஷை செய்யலாகுமா? ஐம்பொறிகளையும் புறக்கணித்தலாகுமா? பகைவர் வேரூன்றியபின் அசைக்கப்படார். அந்தணரும், ஆவினங்களும், மறைகளும், தவமும். உண்மையும், ஐம்பொறி யடக்கமும், மன வடக்கமும், சிரத்தையும், தயையும், பொறுமையும், வேள்விகளும் ஆகிய இவை எல்லாம் திருமாலின் உடம்புகள். முனிவர்களைத் துன்புறுத்தினால் திருமால்துன்புறுத்தப் படுகிறார், என்றெல்லாம் பிரமஹிம்ஸையை விவரிக்கக் கம்ஸனும்

விஞ்சை விளையும் அன்றுனடிமை
வென்றி யடிகள் தொழவாராய்.

அது கேட்டு ஆமோதித்து வேண்டு முருவம் எடுப்பவராய் எங்குஞ் சென்று வேண்டிய வேண்டியாங்கு செய்து கொள்க என்று அசுரர்களை நாற்றிசையும் அனுப்பி இருந்தனன். காலன், அவ்வசுரர்களின் காலம் பார்த்தமையால் அவர்களும் நல்லோர்களுக்கெல்லாம் தீமைகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

ஔவைப் பிராட்டியார். (2)

ஸ்ரீ வத்ஸன்

ஔவை பிராட்டியார் பாலர் முதல் விருத்தர் வரை யாவருக்கும் உகந்தவாறு தக்க கருத்துக்களை அமைத்து எளிய நடையில் பாடி இருக்கிறார் என்றும் அவர் இளமையில் இல்லறம் நடத்தி பிறகு அறிவு வளர்ச்சி ஏற்பட்டு சமய குரவர்களைப் போன்று பாமர மக்களிடையே யாத்திரை செய்து நீதி முறைகளைப் பாடி வந்திருக்கிறார் என்றும் அவர் பாடிய சில பாடல்களின் கருத்துக்களை நோக்கின் அவை ஞானிகட்கும் யோகிகட்கும் பொருத்தமானவையுமாகக் காண்கின்றன என்றும் சென்ற சஞ்சிகையில் காணப்பட்டது.

“கலகலெனச் சிலகலைகள் பிதற்றுவதொழிவதுனைச் சிறிதுரையாதே...........”

(அருணகிரியார்)

கலகலவென எண்ணற்ற பாட்டுகளைப் பாடுவதைக் காட்டிலும் பரமனைப்பற்றி ஒரு சில வரிகள் இயற்றினும் அதுவே மேம்பாடுடையதாகும்

கூற்றத் தத்துவ நீக்கிப் பொற்கழல்
கூட்டிச் சற்றருள் புரிவாயே.

என்ற அருணகிரியார் வாக்குப்படி ஒளவைப் பிராட்டியார் நூற்றுக்கணக்கில் அல்லது ஆயிரக் கணக்கில் பாடவில்லை. அவர்

'நரம்பெனு நாடியிவையினுக் கெல்லாம் உறம்
பெறுநாடி யொன்றுளது''

(ஒளவைக் குறள்)

அதாவது இந்த சரீரத்தில் நாடி, நரம்புகள் 72000 எழுபத்திராயிரம் உளவாயினும் அவற்றிற் கெல்லாம் முக்கிய நாடி ஒன்றே உளது என்று கூறியபடியும் எவ்வளவு அற நூல்கள் (ஞானநூல்கள்) பாடினாலும் அவையாவும் ஒருவனையே குறிக்கும் என்ற கருத்தையும் இருத்தியே இவர் குறைந்த அளவில் செய்யுட்களைப் பாடி இருக்கிறார் எனத் தெரிகிறது.

மேலும் நேராக இவர் பரமனைப் பற்றி பாடாவிடினும் அக் கருத்தையிட்டு உலக மக்கட்கு நீதி முறைகளைப் போதிக்கும் முறையில் பாடியிருக்கிறார் என்பதற்கு இவர் பாடி உள்ள "ஆத்திச்சூடி" "கொன்றைவேந்தன்'' "உலகநீதி" "மூதுரை" "நல்வழி'' இத் தலைப்புகளைக் கொண்ட செய்யுட்களே சான்றாகும்.

மற்றும் இவரது பாட்டுக்களில் உள்ள ஆழ்ந்த கருத்துக்கள் மௌனம், ஞானம், யோகம், வைத்தியம் முதலிவற்றை எப்படிப் போதிப்பதாகும் என்பதைப் பற்றிக் கவனிப்போம்.

அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக் கடியினை தரவேணும்

மோனம்

வாசித்துக் காணொணாதது, பூசித்துக்கூடொணாதது
வாய்விட்டுப் பேசொணாதது, மாசர்க்குத் தோணொணாதது
ஓசைக்குத்தூரமானது, லோகத்துக் காரியானது (அந்த)
யோகத்தைச் சேருமாறு மெய்ஞானத்தை போதிப்பாயினி
—திருப்புகழ்

அருணகிரியார் கந்தரின் புகழைப் பாடினார், கந்தரது அலங்காரத்தைப் பாடினார், கந்தரது அந்தாதியைப் பாடினார், பிறகு கந்தரது அனுபூதியைப் பாடினார். பக்தி மேம்பாடுகளைப் பாடிப் பின் அனுபவம், அதாவது கந்தர் அனுபவம், யோக அனுபவம், அந்த அப்பியாசத்தைப் பாடிய அருணகிரியார் வேலவரை வினவுதல் போல, ஐயா, நாம் உம்மைப் பற்றி வேண்டிய அளவில் வாசித்தோம், பேசினோம், பூசித்தோம், தோத்திரப் பாக்கள் (புகழ்கள்), மாசற்ற கவிகள் பாடினோம், அதாவது, "மன்னனும் மாசு அறக்கற்ருேனும் சீர்தூக்கில் மன்னனிற் கற்ருேன் சிறப்புடையோன்" என்றபடியும், "குற்றமே பெரிதுடையான்" என்று ஸ்ரீ அப்பர் ஸ்வாமிகள் தம்மைப்பற்றிக் கூறியிருக்கும்போது எம்மிடமும் (அருணகிரியாரிடமும்) குற்றமே பெரிதாயிருந்தாலும், யாம் பாடியுள்ள கவிகள் குற்றமற்றவை; ஏனெனில், அவைகள் மாசற்றவராகிய உம்மைப்பற்றியவை யன்ருே? அப்படிப்பட்ட புகழையும் பாடிய எமக்கு உம்மைக்காண முடியவில்லையே. ஹே லோக நாயகரே! அண்டங்கட்கெல்லாம் அதிபதியே! "நான் உம்முடன் ஐக்கியப்பட்டு, நான் நீங்களாகவும்,

---

செயகுகொடணைகுக சிவமலை மருவிய பெருமாளே
தழைந்த நயனமும் இருமலர் சரணமும் மறவேனே.

நீங்கள் நானாகவும்" ஏற்படும் அந்த யோகத்தை நான் அடைய எப்படிப்பட்ட ஞானம் வேண்மோ, அதை இனி போதிக்க முன்வருவீராக" என்று துதிக்க, அதற்கு வேலவரும், "ஐயா அருணகிரி உமது வினாக்கட்கு ஒன்றே விடை; அதுதான் மோனம்" எனவும், அருணகிரியார் திகைத்து, என்ன இது புதிருக்குப் புதிர் போட்டாற் போலவன்றோ உளது இவ்வருள் வாக்கு. இதன் கருத்துத்தான் என்ன, தெரியவில்லையே,

"சொல்லும் பொருளும் அற்று சும்மாஇரு என்றலுமே
பொருள் ஒன்றும் அறிந்திலேன்"

(க. அனுபூதி)

என்று வேண்டுகிறார். இதற்கு யாது பதில் வந்தது என்பதை பிறகு விவரிக்கிறோம்.

இனி இதேநிலையில் தாயுமானஸ்வாமிகள் சொல்வதைக் கவனிப்போம்:—

"சும்மாவிருக்கச் சுகஞ்சுகமென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங்கேட்டு, அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந்தப்பி யென் பேதமையால்
வெம்மாயக்காட்டிலலைந்தேன் அந்தோவென் விதிவசமே"

"மோனம் காரு" மௌனமாயிரு என்று பல முறைகள் கேட்டும் யான் தவறியது என் விதிவசமே என்று தன்னை நொந்துகொண்டு, பிறகு அவ்வாறே அப்பியசிக்க ஆரம்பித்தார். பிறகு அதில் ஓர் இன்பத்தைக் கண்டார், அதிலேயே யிருக்கவும் ஆசை கொண்டார். (தொடரும்)

பழநிச்சிவகிரி மீதினிலேவளர் பெருமாளே
கருணைப் படியெனை யாளவு மேயருள் தாவேணும்.

179

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகள்.

குழந்தைகளுக்கு
- ரூ12 காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை.
- ரூ18 கர்ஜன் — கோரோஜனை மாத்திரை.
- ரூ15 பாலக்ஸ் — பேதியாக மாத்திரை.

குடும்ப அவசியங்கள்
- ரூ99 ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்.
- ரூ77 காலரெக்ஸ் — அஜீர்ணபேதி காலராவிற்கு.

தின உதவிகள்
- ரூ55 ஜிஞ்சிப் — அஜீர்ண பித்த சமணி.
- ரூ78 கூலெக்ஸ் — உஷ்ண. சமன. ஸ்நான தைலம்.
- ரூ61 நஞ்சன்கூடுபல்பொடி — (பயோரியா) பல்உபாதைகளுக்கு.

கேசனம் கூந்தல் செழிப்புக்கு கலயம்

காஷ்மீர் குஸும்

என்ற மலர் மூலிகையை உங்கள் எண்ணெயுடன் கலந்துகொள்க.

சிறந்த சரும வைத்தியன்.

ஸீான்டலக்ஸ் சந்தனக் களிம்பு.

காயம், தீப்புண், சொறி, சிரங்கு, பரு, குணமடைய.

மைசூர் பிரேம்லீலா ஊதுவத்திகள்

எமார்ஜஸ், அகர்ஸ்பெஷல், அம்பர்ஸ்பெஷல், ஜவாது.

சோல் ஏஜண்டு:- யுனைடெட் கன்ஸர்ன், 56, பந்தர் தெரு, மதருஸ் 1.
(மதுரை, கோவை, குடந்தை, பம்பாய்.)

"மாலா"

வாசனைகள்

*

அத்தர்கள்

*

வாசனை மெழுகு (கோன்)

*

கைக்குட்டை சென்டு

*

சில்க் பைகள்

(ஆடைகளைக் காப்பாற்ற பெட்டியில் வைக்க)

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்

53, கிடங்கு தெரு, மதருஸ் - 1.

Reg. No. M. 5390

180

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

தமிழில் ஸ்ரீ வால்மீகி மகரிஷி ப்ரணீத

சுந்தர காண்டம் (பாராயணத்திற்குரியது) ரூ. 2-4-0

ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் அருளிய

கிருஷ்ண லீலா தரங்கணி ரூ. 1-8-0

T. S. நாகராஜ பாகவதர் அவர்களால் தொகுக்கப்பட்ட

பஜனோத்ஸவ பத்ததி அணா. 12.

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணிமூலவீதி, - மதுரை.

TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.